# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 இரட்டை (சூலை 1—15 விலை உருபா 1·50 (இதழ் எண்: 156)


# நடிகை ஆட்சியில் நாடே கெட்டுக் குட்டிச்சுவர் ஆகிறது!

## அன்று, பாண்டியனாண்ட மதுரையில் செயலலிதா ஆட்சியில் இருந்திருந்தால் அறம் கேட்க வந்த கண்ணகியைக் காவலர்களை விட்டுக் கற்பழிக்கச் சொல்லிக் கொன்றிருப்பார்! அவளின் மற்ற காற்சிலம்பையும் திருடியிருப்பார்!

சூன் மாத இறுதியில் மதுரையில் செயலலிதா நடத்திய ஆரவாரத்தனமான ஆடம்பர மாநாடு, அவரையும் அவர் கட்சியையும் பொறுத்த அளவில் ஒரு விளம்பர மாநாடாகவே இருந்தது! வெற்றி மாநாடு என்பது செயலலிதாவுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைத்த பொருள் சுரண்டலைப் பொறுத்தது.

செயலலிதாவின் அரசியல் வெற்றிக்கு அவருடைய அறிவாற்றல் காரணமா, துணிவு-காரணமா—என்னும் தலைப்பில் பகட்டுப் பட்டி-மன்றம் ஒன்றும் மாநாட்டில் நடந்தது. எங்கு கூப்பிட்டாலும் வேட்டியை இழுத்துக் கட்டிக் கொண்டு வர அணியமாயிருக்கும் திருக்குறள் முனுசாமியார் தலைமை! பெரியார், அண்ணா,

ம. கோ. இரா. மூவருக்கும் சேரும் கூட்டம் செயலலிதாவுக்கு மட்டுமே சேர்ந்திருப்பதாகப் பீற்றினர் முனுசாமியார். பெரியாரும் அண்ணாவும், திரைப்பட நடிகர்களல்லர்! கவர்ச்சி காட்டும் பெண்களும் அல்லர்! ம.கோ.இரா.வோ இவ்வளவு அள்வு செலவிட்டுக் கூட்டம் சேர்க்க முயற்சி செய்யவில்லை. இவையெல்லாம் முனுசாமிக்குத் தெரியாமலிருக்க முடியாது. பின் ஏனோ அவர் செயலலிதாவின் காசு—கவர்ச்சிக் கூட்டத்தைத் திறனாய்வு செய்துள்ளார். இதுவும் அவர் திறமைகளில் ஒன்றுதான்!

செயலலிதா வெற்றி மாநாடு கொண்டாடும் அளவுக்கு அவர் எதுவுமே செய்யவில்லை என்பதை அவரின் இன இதழான '**தினமணி**'யே இவ்வாறு எழுதியிருந்தது. (உரை தூய தமிழ்ப் படுத்தாமல் அப்படியே வெளியிடப் பெறுகிறது).

"இத்தனை பெரிய அளவில் கொண்டாடுவதற்கு சாதனைகள் அப்படியொன்றும் பிரமாதமாக இல்லை. புதிய வளர்ச்சித் திட்டங்களுக்காக, நூற்றுக் கணக்கில் அடிக்கல்லை (கவனிக்கவும்—வெறும் அடிக்கற்களை மட்டும்) தடபுடலான விளம்பரத்துடன் நாட்டியிருக்கிறார். பெரிய தொழில்களைத் தொடங்குவதற்கான ஒப்பந்தங்கள் (கவனிக்கவும்-ஒப்பந்தங்கள் மட்டும்) கையெழுத்தாகியுள்ளன."

"கொலை, கொள்ளை, வழிப்பறி, சங்கிலிப் பறிப்புப் பற்றிய செய்திகள் அதிகரித்து வருகின்றன. கள்ளச் சாராய வியாபாரம் தடையின்றி நடைபெற்று வருகிறது... ஆட்சிக்கு வந்ததுமே மலிவு விலை மதுக்கடைகளை மூடிவிட்டு, மதுவிலக்கு கொள்கையைத் தீவிரமாக அமல்படுத்துவதாக அவர் கூறியது பொய்யாகி விட்டது."

"விலைவாசி உயர்வுக்கிடையே பஸ், மின் கட்டணங்களை உயர்த்திய செயலலிதாவிற்குப் பொதுமக்களின் பேராதரவு குறைந்து வருகிறது. ஊழல் முன்னைவிட அதிக அளவில் பரவிவிட்டது. ஏழைகளுக்கான இலவசங்கள் அவர்களை சென்றடைவதில்லை. இடையிலுள்ள ஆட்சிக்காரர்களும் அதிகாரிகளும் பெரும் பகுதியை விழுங்கி விடுகிறார்கள்... செயலலிதாவின் ஆட்சி அடக்குமுறை ஆட்சி என்பதைவிட ஒடுக்குமுறை ஆட்சி என்று சொல்வதே பொருத்தமானதாயிருக்கும்"— (**தினமணி**—28-6-92)

அரசியலறிவு துளியுமற்ற ஒரு திரைப்படக் கவர்ச்சி நடிகையின், படபிடிப்பு ஆரவாரங்கள், காட்சி சுவடணைகள், விளம்பர வெறித்தனங்கள் போலும் பண நடவடிக்கைகளால், எந்த அளவுக்கு நாட்டைக் கெடுக்க முடியும்—தம் அதிகார ஆட்சித் தனங்களைக் கொண்டு கொள்ளையடிக்க முடியும்—என்பதற்கு செயலலிதாவின் கடந்த ஓராண்டுக் கால ஆட்சியே வரலாற்றில் தக்க சான்றாக அமையும்!

நாட்டில் கொலை, கொள்ளை, வழிப்பறி நகைகள் பறிப்பு, குடியினாலும் திறமையின்மையினாலும் அன்றாடம் நேர்கின்ற பேருந்து, சரக்குந்து, மகிழுந்து மோதல்கள் நேர்ச்சிகளால் மிகுதியான பேர்கள் சாகின்றனர். அத்துடன் செயலலிதா தம் புகழ் அரிப்பை நீக்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யும் விழா வேடிக்கைகளாலும், ஆயிரம் ஊர்திகள் ஊர்வலங்களாலும், மகாமக விளம்பரக் குளியல்களாலும் நேர்ந்த சாவுகளும் மக்கள் பண அழிவுகளும் கடந்த ஓராண்டில் அதிகம்! அதிகம்! மிக அதிகம்!

தாம் செய்யப் போகும் அழிம்புகளுக்கும் ஆரவார விளம்பரப் போலி அரசியல் தனங்களுக்கும், மிக மிக எச்சரிக்கையாக, முன்கூட்டியே, விடுதலைப் புலிகளின் பெயரால் தக்க பாதுகாப்பைத் தேடிக் கொண்ட ஒரு பார்ப்பனத் தந்திர அறிவைத் தவிர, செயலலிதாவிடம் அறிவோ துணிவோ கொஞ்சமும் இல்லை என்பது, அவரின் காலடிகளில் சரணடைந்து கிடக்கும் மந்தி(ரி)களான மரமண்டைகளுக்கு உறைக்காமற் போனது ஏன்?

அண்மையில் நடந்த நடவடிக்கைகளுள் மிக மிகக் கொடுமையானதும் குலைநடுங்கச் செய்ததுமான நிகழ்ச்சி அண்ணாமலை நகர்க் காவல் நிலைய நிகழ்ச்சியேயாகும். அந்த நகரில் ஓர் ஏழை—தாழ்த்தப்பட்ட—பழந்தமிழ்க்குடிப் பெண்—பத்மினி என்பவர், குற்றஞ் சாட்டப்பட்டுக் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப் பெற்றிருந்த தன் கணவன் நந்தகோபால் என்பவரைப் பார்க்கச் சென்றபொழுது, அவரை ஆய்வாளர் ஒருவர், காவலர்கள் நால்வர் ஆகிய ஐந்து கயமைக் காவலர்களால் இரவு முழுவதும், பலமுறை—அவள் தன்னால் தாளமுடியவில்லை என்று பலமுறை கதறியழுதும், காலில் விழுந்து கெஞ்சியும்—விடாமல் கற்பழித்தும், அவள் உடல் முழுவதும் வெறிநாய்களைப் போல் கடித்துக் குதறியும் கொடுமை செய்திருக்கிறார்கள். இப் பாலியல் வன்முறைக் கொடுமையை நேரிடையாகப் பார்த்துப் பதறியெழுந்து தடுக்கப் போராடிய அவள் கணவனை அக் காவல்துறை விலங்குகள் அடித்தே கொன்றிருக்கின்றன. இந் நிகழ்ச்சிகளையெல்லாம் நேரில் பார்த்த, அங்குக் காவலில் வைக்கப்பட்டிருந்த, அதே ஊரைச் சேர்ந்த, அக் கணவன் மனைவியை அறிந்த நண்பர்களான சுப்பிரமணி, கொளஞ்சி என்னும் இருவரும் கடுமையாக அரற்றி, அடித்து, அக் காவல் கயவர்களால் மிரட்டப்பட்டுள்ளனர். அதன் காரணமாகவே வேறு எதன் காரணமாகவோ சுப்பிரமணி என்பவரை இதுவரை காணவில்லையென்றும், கொளஞ்சி என்பவர் மனத்தாக்கம உற்றவராய் பித்துப் பிடித்துள்ளார் என்றும் சொல்லப் படுகிறது.

(தொடரும்)

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

நிறுவனர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தலைமையகம்: பறம்பை அறிவன், பொதுச் செயலாளர், பறம்புக்குடி. 623 707. முகவை மாவட்டம், தமிழகம்.


# செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்!

## அமர்த்த அறிவிப்பு - 8 (7-6-92)

கலை இலக்கியச் செயலகச் சார்பு அமைப்பு:

1. தமிழ்க் கலை இயக்கம்.
   நெறியாளர்: திரு. வி.க. சக்திவேல்,
   25. சீவா தெரு,
   மணப்பாறை - 621312.

தூய தமிழ் ஆய்வியக்கச் செயலகச் சார்பு அமைப்பு:

1. தனித் தமிழ் மன்றம்.
   நெறியாளர்: திரு. க. அப்பாத்துரையார்,
   நடுப்பட்டி-
   திண்டுக்கல் சாலை - மணப்பாறை வழி.
   திருச்சி மாவட்டம்
2. தமிழ் இதழியல் துறை:
   நெறியாளர்: திரு. அ. பார்த்தலோமியு க.மு., கல்.மு.
   எசு. காவனூர், பறம்பை வட்டம்
   முகவை மாவட்டம்

## உ.த.மு.க. பொதுச் செயலாளர் அறிவிப்பு!

### ஆட்சியாளர்க்கு வேண்டுகோள்!

**கருத்துரிமையைத் தடுக்காதீர்...**

**தடுத்தால், அறியாமை இருளில் தத்தளிப்பீர்!**

'தமிழ் நிலம்' இதழ், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் நடைமுறைச் செயல், கருத்துகளை வெளியிட்டு வருகின்றது. இதன் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். அவருடைய முழுப் பொறுப்பில் வெளிவந்த போதும், படைப்பாளிகளின் — தமிழின எழுத்தாளர்களின் கருத்துகளை வெளியிட்டுக் கருத்துரிமைக்கான களமாகத் 'தமிழ் நிலம்' ஏடு நடைபோடுகின்றது.

'தனு பற்றிய பாடல்—உரைப்பா' வெளி வந்துள்ளது என்பதால், 'தமிழ் நிலம்' இதழைப் புதுச்சேரியில் பறிமுதல் செய்துள்ளனர் காவல் துறையினர். 'தனு' 'இராசீவ் காந்தியின படுகொலைக்குக் காரணமானவள் என்பதால். அவளைப் பாராட்டி எழுதக் கூடாது என்கின்றனர்.

நாம் இங்கே, இதுபற்றி, எரிந்தகட்சி எரியாத கட்சி'ச் சண்டைபோட விரும்பவில்லை. வரலாற்றின் திசையை எவரும் திருப்பிவிட முடியாது. காரணம் வரலாற்றை மக்களாற்றலே உந்திச் செலுத்துகிறது. எனவே, நாம் 'தனு' செய்தது 'சரி, தவறு' என்ற பிடியில் அகப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. ஆனால், 'சரி' என்பதற்கும் 'தவறு' என்பதற்குமான கருத்துரிமை வேண்டும் என்பதே நமது நிலைப்பாடாகும்!

இராசீவ் இந்தியாவின் தலைமை அமைச்சராக இருந்து, பேராயக் கட்சித் தலைவர் என்ற தலைமையில் படுகொலைக்கு ஆளானார். இவரது 'சாவு'க்கு யாருடைய சாவும் காரணமாகி விடமுடியாது, அதே வேளை எவராலும் அவருடைய சாவை-ஏன் எவருடைய சாவையுந் தடுத்துவிடவும் முடியாது; முடியவில்லை என்பதைப் பார்க்கிறோம்!

இராசீவ்காந்தி ஒரு கட்சித்தலைவர்; ஆட்சி காரணமாகப் பல எதிர்ப்புகளையும் ஆதரவுகளையும் கொண்டிருந்தார். அவருடைய சாவு பற்றியும் படுகொலைக்குக் காரணமானவர்கள் பற்றியும் ஆராய-கருத்துச் சொல்ல அனைவர்க்கும் உரிமை வேண்டும்.

'தமிழ் நிலம்' மட்டுமன்று, எந்த இதழாயினும் அவற்றிற்கு முழுக்கருத்துரிமை வேண்டும்!

தமிழர்க்கு எதிராகப் பேசுகின்றவரும், ஆதரவாகப் பேசுகின்றவரும் 'தமிழகத்தில்' உண்டு. இவர்களின் கருத்துப்போரை அரசு தடுப்பது கூடாது. அதுவும் தமிழர் ஆதரவு ஏடுகளை மட்டுமே-கருத்துகளை மட்டுமே தடுப்பது என்பது இந்திய அரசின் ஆட்சிமுறைக்கு அழகு ஆகாது!

விடுதலைப் போராட்டக் காலத்தில், கொலை புரிந்த வாஞ்சி வீரனை இன்று பாராட்டப்படுகிறார். இன்று 'தானு'வைப் பாராட்டுகிறவர்கள் எதிரிகள்! நாளை அவர்களைப் பாராட்டுகின்ற வரலாறும் திரும்பலாம். இன்று பாராட்டப்படுகிறவர்கள் 'நாளை தூற்றப்படும் நிலைமையும் வரலாம். கருத்துரிமை தருவதால் மட்டுமே, இந்த இடைவெளி நீங்கி, உண்மையான வரலாறு உருவாக முடியும்! எனவே, கருத்துரிமை ஒன்றே கால வரலாற்றின் உறுதிப்பாட்டை, உரசிப் பார்க்கும் கட்டளைக்கல் என்பதை உணர்ந்து அரசுகள் 'தமிழ்நிலம்' போன்ற தன்னலமற்ற கருத்துப் போராளிகளுக்கு இடையூறு செய்யாமல் விலகி நிற்குமென நம்புகிறேன்! ○

Scanned with CamScanner

# ‘தென்மொழி’ அன்பர்களும் ‘தமிழ் நிலம்’ நோக்கமும்!

(ஒரு விளக்கம்)

தென்மொழி — தமிழ் — தமிழர் — தமிழினம் இலக்கியம், மொழியியல், மெய்யியல், அறிவியல் என, அது தொடாத துறைகள் இல்லை. அதன்பால் தம்மை இணைத்துக் கொண்டவர்கள் எல்லாரும் ‘தமிழ் நாட்டின விடுதலை’, நோக்கம் கொண்டவர்கள் அல்லர். ‘தனித் தமிழ்நாடு’ என்ற தீர்வு தான் தமிழர்க்கு விடுதலை தரும் என்பது பாவலரேறு அவர்களின் தென்மொழியின் உயிர் மூச்சுக் கொள்கையறிவிப்பாகும். இக்கொள்கை வழியில் செல்பவரை—போராடுகின்றவரைத் ‘தமிழ் நிலம்’ நோக்கிற்கு வந்தாக வேண்டும் என்று நாம் உ.த.மு.க.வினர்-கட்டாயப்படுத்தல் இயலாது.

உ.த.மு.க.வின் கொள்கைகள் தெளிவானவை. தென்மொழிக் கொள்கையினும் விரிவான, செறிவான மெய்ம்மம் கொண்டவை. ‘விடுதலை’ பெற்ற நாட்டிலும் உ.த.மு.க.வின் கொள்கைக்கான வேலையும், போராட்டமும் தொடர்ந்திருக்கும். பதவி, அதிகாரம், அரசில் இடம்பெற விழைபவர் உ.த.மு.க.வில் செயல்படல் இயலாது. தமிழினத்திற்கான உலகப்பேரவை உ.த.மு.க! இன்றுள்ள அனைத்து நாட்டுப் பேரவை போன்றது அது. இன்றுள்ள நிலைமையில் உ.த.மு.க.வின் பெருமை விளங்காது. அதன், செயல் மலர்ச்சியில், தமிழினம் மட்டுமின்றி-உலக மாந்தவினமே-வாழ்த்தி வரவேற்பதற்குரிய இடத்தை உ.த.மு.க. பெற்றே தீரும். நம்புகிறோம! திருவள்ளுவத்தைத் தலை நூலாகக் கொண்டு, இன்றைய அறிவியல் கருவி வளர்ச்சி நுட்பம், தெளிந்து, அறநெறியில் செல்லும் வீறுமிக்கது உ.த.மு.க.

எனவே, ‘இன்று உலை வைக்க அரிசி தேடுகின்றவனை’யும் ‘வயலுழவு செய்கிறவனை’யும் ஒப்பிட்டு நோக்கி ஒடுங்கிக் கிடப்பதில்லை நாம! ‘வயலில் உழவு’ செய்கின்றவனைப் போன்றது. உ.த.மு.க. இதன் அறுவடை பற்றிக் கற்பனை செய்திருப்பதற்கில்லை. உழவை ஆழமாகவும், அகலமாகவும், அழுத்தமாகவும் மேற்கொள்வோம்! இதிலேயே இன்று நம் வாழ்நாள் முடிந்து போகலாம்! போகட்டுமே!

‘அறுவடை’க் காலத்தில் ‘அவர்கள்’ வரக் கூடும். உழுகின்ற காலத்தில் ஊர்வழி போனவன் ‘அறுவடை’க் காலத்தில் வருவான்! அவன் ‘எதை அறுப்பானோ’ ?

நாம் உ.த.மு.க.வின் கொள்கையை உயர்த்திப் பிடிப்பவர்கள். ஆகவே, நாம் ‘பட்டினி’ கிடக்க நேரிடும். ‘குப்பை மேடேறிக் கோழி பிடிக்கத் தெரியாதவர்கள்’ என்று நம்மை அவர்கள், பகடி பண்ணக் கூடும்! அதனால், தலைக்குனிவும் வரும்! ‘பொதுமானம்’ கருதித் ‘தன்மானம்’ இழக்கவும் அணியம் ஆவோம்!

‘தென்மொழி அன்பர்களைக் கருத்துக் கேட்பது’ என்பது முடிந்து போன ஒன்று. உ.த.மு.க.-விற்கு அத்தகைய ‘தேவை’ இல்லை. ஏனெனில் உ.த.மு.க.வைத் தோற்றுவிக்கும்போதே, அதன் இன்றியமையாமை பற்றிய ஆராய்வைத் ‘தென்மொழி’ அன்பரில் பலவகையினரையும், தமிழர் அனைவரையும் வைத்துச் செய்தாயிற்று. ‘எண்ணித் துணிக கருமம்’ என்கிற வள்ளுவம் அறியாதவரன்றே நாம்!

உ.த.மு.க.வின் ‘கழக முதல்வர்’, விலகியதற்கான தம் காரணங்களை விளக்கியுள்ளார் சுருக்கமாக. மேலும், தெளிவு பெற விரும்புவோர், பாவலரேறு அவர்களையே நாடுவாராக! அல்லது ‘தமிழ் நிலத்தை’ ஊன்றிப் பயில்வாராக!

‘உ.த.மு.க.வை அரசியல் கட்சியாக்கும் எண்ணம் உள்ளது’—இன்றுள்ள சூழலில் ஒரு மாற்றை உ.த.மு.க. தரக்கூடாதா என்ற ‘அழகிய ஆசை’யைச் சுட்டிக் காட்டுவது, ‘தீ என்றதும் நாக்கு, சுட்டு விடும்’ என்பதாகுமா?

உ. த. மு. க. நெறிமுறைகளை வகுப்பது தொடர்கிறது. மக்கள் நாயக உணர்வுடைய நெறிமுறைகளா என்று காண்க. மக்களைச் சார்ந்து வளர்ந்து ‘மக்கள் நாயக முறை’ வலிமை பெறும். இப்போதுள்ள ‘நிலைமை’ அறிந்தவர், ‘மக்கள் நாயகம்’ என்பது சீரழிந்த பொருளில் வழங்கப் படுவதை உணர்வர். ‘மக்கள் நாயக’ உணர்வினை வளர்த்தெடுக்க—நம் கொள்கைகளை நாம் ஏற்றிருக்கிறோம்; நடைமுறையில் கையாள்கிறோம் என்பது ‘முதல் தேவை’யாக உள்ளது.

‘தேர்தலில் நிற்கலாமா, வேண்டாமா’ என்று கேட்டு விட்ட பிறகு ‘வேண்டாம்’ என்கிற கருத்தை, ‘இன்றைய அரசுச் சிந்தனை’ தந்து விடாது. ‘வேண்டாம’ என்பவர்களும், ‘வேண்டும்’ என்பவர்களும் எத்தகையானவர்கள? நாம் அப்படி முடிவெடுக்கப் போவதில்லை. அதற்கான ‘தகுதி’ நமக்குமில்லை; நம் மக்களிடம் அத்தகைய ‘மக்கள் நாயக’ நெறிமுறை வளரவுமில்லை. அதற்கான முயற்சியை நாம் நம் அமைப்பின் வழி கொண்டு வர நெடிது முயல்வோம்!

‘தமிழ் நிலம்’ மக்களிடம் போகும். ஏனெனில் அது மக்களின் நுண் தேவைகளை முன் வைத்துள்ளது. ஆயினும். அதன் கொள்கை இறுக்கம், வளர்ச்சி’க்குத் தடையாக இருக்குமென்ற ‘ஐயம்’

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# புரட்சித்தலைவி 'தானு'

## திருப்பெரும்புதூரில் பரபரப்பை ஏற்படுத்திய துண்டு வெளியீடு!

'விடுதலைப்புலிகளுக்குத் தடை' என்ற அறிவிப்பு வெளியானவுடன், தமிழகக் காவல்துறை படு சூடாக்கப்பட்டது. அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் எங்கேனும் தாறுமாறான நிகழ்ச்சிகள் நடக்கலாம் என எதிர்பார்த்ததே இதற்குக் காரணம்.

குறிப்பாக மே-21 இராசீவின் நினைவு நாளன்று திருப்பெரும்புதூருக்குத் தலைமையமைச்சரும், செயலலிதாவும பங்கேற்கும் நிகழ்ச்சியின் போது, மீண்டும் ஒரு மே 21 ஆகிவிடக் கூடாது என்பதால், காவலர் படை திருப்பெரும்புதூரில் குவிந்தது. துணை மாநிலக் காவல்துறை அதிகாரி (D.G.P) சிறீபாலும், மாநிலக் காவல் துறைப் பொது இயக்குநர் (I.G.O.P.) தேவாரமும் நிகழ்விடத்திலேயே கூடாரம் அடித்து அங்குள்ள ஒவ்வோர் அசைவையும் உன்னிப்பாகக் கண்காணித்து வந்தனர்.

நினைவு நாளன்று பல குறுக்கச் (ஏக்கர்) சுற்றளவுக்கு அமைக்கப்பட்டுள்ள வேலிக்கு இணையாகக் காவலர் தொடரி (சங்கிலி) அமைக்கப்பட்டது. நகர வீதிகளில் ஐந்தடிக்கு ஒரு காவலர் மேனி துமுக்கியைத் தோளில் தாங்கிக் கண்காணித்தனர்.

நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு 2 அ. மா. (கி.மீ) தொலைவிலேயே ஊர்திகள் நிறுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன, மாழை ஆய் கருவிகள் (மெட்டல் டிடெக்டர்கள்) திடலுக்குள் நுழையும் ஒவ்வொருவரின் உடலையும் ஆய்வு செய்தது. இவையெல்லாம் போதாவெனத் திடலின் இரு பக்கங்களிலும் அமைந்திருந்த கண்காணிப்புக் கோபுரங்களில் இருந்தபடி காவலர் தொலைநோக்கிகள் மூலமாகக் கண்காணித்து வந்தனர்.

இத்தனைப் பாதுகாவலையும் உடைத்துக் கொண்டு விளக்கெண்ணை ஊற்றிக் கொண்டு திரிந்த காவலர்களின் கண்களில் மண்ணை வாரித் தூவியிருக்கிறது, ஒரு வெள்ளை நிற 'டயோட்டா' ஊர்தி. வண்டிக்கு எண் தகடு இல்லை.

கூட்டம் நடைபெறுவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாக வந்த மூடுந்து (van) இராசீவ் நினைவிடத்திற்கு வெகு அருகில் வந்து கட்டுக் கட்டாகத் துண்டு அறிக்கைகளை அள்ளி வீசிவிட்டு மாயமாய் மறைந்திருக்கிறது.

அத் துண்டு அறிக்கையில் இராசீவால் இலங்கைக்கு ஏவப்பட்ட அமைதிப்படை என்ற இந்திய போராளம் (இராணுவம்) தமிழீழத்தில் செய்த கொடுமைகள் விளக்கப்பட்டிருந்தன. 'பாஸிஸ வாதி', 'இரத்தக்காட்டேரி' போன்ற சொற்கள் இராசீவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன. அமைதிப் படையின் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள் போன்ற உறுப்புச்சிதைவு (சித்திரவதை) களால் ஏற்பட்ட உணர்விலேயே 'தானு' 'நீதி கேட்கும் கண்ணகியாக மாறினாள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது' தானுவின் உயிர் ஈகத்திற்கு வணக்கமும் அவளின் துணிச்சலுக்குப் பாராட்டும் தெரிவிக்கப் பட்டிருந்தன,

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருந்த தாவது:

"தானுவுக்கு வீர வணக்க நாள் மே 21. ஈழத் தமிழனின் எழுச்சி நாள்!!

"பெண் போராளி தானுவுக்கு வீர வணக்கம். அடிமைத் தமிழனே! அன்னிய நாட்டின் கைக் கூலியாக இலங்கைத் தமிழனின் துரோகியாய், ஈழத்தமிழனின் அரத்தம் குடித்துத் தேசிய இனங்களை ஒடுக்கிய பாசிச இராசீவா உண்மைத் தியாகி? உண்மைத் தியாகி தமிழச்சி—வீரப்பெண் தானுவே,!

ஈழத் தமிழனின் விடுதலைப் போராட்டத்தை உலகுக்குக் காட்டிய புரட்சித் தலைவியே! உன் உயிர்த் தியாகத்திற்கு எங்கள் வீர வணக்கம்!"

நடுவணரசின் புலி இயக்கத் தடையையும் பொருட்படுத்தாது இனமான உணர்வுள்ள தமிழக மக்களால் வெளியிடப்பட்ட இத்துண்டு வெளியீடு எத்தகைய தடைகள் இடப்பட்டாலும், தமிழகத்தில் மக்களின் இன எழுச்சியை அடக்க முடியாது என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும்!

அறிக்கைகளை எடுத்துப் படித்தவர்கள் திடுக்கிட, அருகில் துமுக்கியுடனிருந்த 'போலீஸ்' என்று அழைக்கப்படுபவர்களுக்குச் செய்தி தெரிவிக்கப் பட்டு, அறிக்கைகள் உடனடியாகக் கைப்பற்றப் பட்டன- அறிக்கைகளை எடுத்துச் சென்றவர்களிடமிருந்தும் அவை பிடுங்கப்பட்டன.

அடுத்த சில நிமையங்களில் மேலிடங்களுக்கு கம்பியில்லாத் தொடர்புகள் அலறின- திருப்பெரும்புதூரில் இருந்த அத்தனைக் காக்கிச் சட்டைகளுமே சடக்கென விறைத்துக் கொண்டு சுறுசுறுப் பாகின. அறிக்கையின் அடியில் அச்சிட்டவர் களின் பெயரோ இயக்கமோ எதுவும் இல்லை. இந்தச் செயலைச் செய்திருப்பது உள்ளூர் 'புலி' களா வெளியூர் 'புலி' களா எனக் காவல்துறை குழம்புகிறது. உள்ளூர் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் யாராவதுதான் இதைச் செய்திருக்க வேண்டும் என காவல் துறையினர் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகளுக்குத் தடை அறிவித்துள்ள இந்த நேரத்தில் இந்தத் துண்டு அறிக்கை காவல் துறைக்குக் 'கிலி' ஏற்படுத்தியிருக்கிறது, எண் தகடு இல்லாத வெள்ளை டயோட்டா ஊர்தி அவ்வளவு

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

# இந்தியா மீது 'கொலை வழக்கு'

## 8000 தமிழர்களைக் கொன்று குவித்த இந்திய அரசு மீது உலக அறமன்றத்தில் விடுதலைப்புலிகள் வழக்குப் போடுவார்கள்!

தமிழீழம் பகுதியில் இந்திய அமைதிப்படை (IPKF) தங்கியிருந்த காலப் பகுதியில் ஏறத்தாழ 8000க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றதாக இந்திய அரசு மீது வழக்குத் தொடரப் போவதாக விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு. ஆண்டன் பாலசிங்கம் அவர்கள் பிரிட்டீசு வானொலிக்கு அளித்த நேருரையில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைமையகம் சட்ட வல்லுநர்களுடன் கருத்தாய்வு செய்து வருகிறது.

கோண்டாவிலுள்ள விடுதலைப்புலிகள் அலுவலகத்தில் திரு. ஆண்டன் பாலசிங்கமும் யோக ரத்தினம் என்ற யோகியும் செய்தியாளர்களுக்கு அளித்த நேருரையில் இந்திய அரசுக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

அதே வேளை விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இராசீவின் கொலையில் தொடர்பு படுத்தியிருப்பது பற்றிக் குறிப்பிடுகையில் 'இந்திய அரசின் இந்த நடவடிக்கை குறித்து நாம் வியப்படையவில்லை; எம் தலைவர்களுக்கு எதிராக இந்திய அரசு குற்றச்சாட்டுகளை முன் வைக்கும் என்பதை நாம் எதிர்பார்த்திருந்தோம்' என்றும் குறிப்பிட்டார்.

'ஆனால் அதே வேளை 8000 ஒன்று மறியாத் தமிழ்ப் பொதுமக்களை, மிகுந்த அளவில் கொன்று குவித்தமைக்காக இந்தியாவிற்கு எதிராக அனைத்துலக அறமன்றத்தில் குற்றச் சாட்டுகளை முன் வைக்க வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் திட்டமிட்டு வருகின்றனர் என்பதைப் பாலசிங்கம் தெரிவித்ததாகச் செய்திகள்' தெரிவிக்கின்றன.

மேலும் அவர் குறிப்பிடுகையில் 'எமது இயக்கத்தின் கண்ணியத்தை (கௌரவத்தை) உலக அளவில் சீர்குலைக்க இந்திய அரசு முயன்று வருவதாகவும் எமது சிக்கல்களில் ஏனைய சுற்று வட்டார நாடுகள் தலையிடுவதை இந்தியா விரும்பாத காரணத்தால் சில தன்னாட்சியுடைய நாடுகள் தற்போது மேற்கொண்டுள்ள அமைவான ஒப்புரவு (சமாதான) முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு இந்தியா இவ்வாறு நடந்து கொண்டுள்ளது' என்றும் குறிப்பிட்டார்.

செய்தி: உலகத் தமிழர்—கனடா O

# இராமன் மனைவி சீதைக்கே அந்தக் கொடுமையானால்!

சென்ற ஆண்டு சூன் மாத அளவில் தில்லியில் பெண்கள் பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அதில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர்கள்,

பாரதீய சனதா கட்சியின் படிநிகராளியான ஒருவர் எழுந்து பெண்களின் கண்ணியம் பற்றிப் பேசத் தொடங்கினர்.

அவ்வளவுதான்! அவர் சொல்லிய ஒவ்வொரு கருத்துக்கும் மறுப்பாக, அங்கு வந்திருந்த பெண்ணுரிமை இயக்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து விடை சொல்லத் தொடங்கிவிட்டார்கள்

பாரதீய சனதா கட்சியின் உறுப்பினர் ஒருவர் 'இந்தியப் பெண்கள் எல்லாம் இளவரசிகள்போல் நடத்தப்படுகிறார்கள்' என்றார்.

'இல்லை, இங்கே பெண்கள் எல்லாம் வேலைக்காரிகளாகவே நடத்தப்படுகின்றார்கள்' என்றனர் பெண்ணுரிமை இயக்கத்தினர்.

அதற்கு பா. ச. உறுப்பினர், 'ராம அரசு (ராம ராஜ்யம்) வந்தால்' பெண்கள் விடுதலை பெறுவார்கள்' என்றார்.

உடனே பெண்ணுரிமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எழுந்து, 'சிறீராமன் எப்படித் தன் மனைவியை நடத்தினர் என்பதை மறந்துவிடாதீர்கள்' என்றனர்.

இராமனுடைய அரசில் பேரரசி சீதை எண்ணிறந்த ஏளனங்களுக்கு உள்ளாக்கப்பட்டாள்.

இராவணனின் பிடியிலிருந்து விடுபட்ட அவள் தான் கற்புள்ளவள்தான் என்பதை மெய்ப்பித்திட நெருப்புக் குளியலில் (அக்னி பரீட்சையில்) தேறிட வேண்டியிருந்தது. அதன் பிறகும் யாரோ சிலர் ஒரு புரளியைப் பரப்பினர்கள் என்பதற்காக அவள் கணவனிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டாள்.

வெற்றுப் புரளிக்குத் தரப்பட்ட மதிப்பும் கண்ணியமும் கூட கட்டிய மனைவிக்குத் தரப்படவில்லை 'கடவுளால்'

ஆக, 'இராம ராஜ்யத்தில்—
பேரரசியின் வாழ்க்கை-காடுறை வாழ்க்கை (வனவாசம்) (-நெருப்புக் குளியல் தேர்வு! வாழா வெட்டி! )

-ஒரு பேரரசிக்கே இந்த நிலை என்றால் பொதுவான-குடிமக்களின்—அடிமைப் பெண்களின் நிலை என்ன?

—இது பெண்ணுரிமை இயக்கத்தைச் சார்ந்தவர்களின் கேள்வி!

—நன்றி: 'உமன்சு எரா'-சூன்' 91 O

*இதழ் எண்: 154-இன் தொடர்ச்சி:* **தொடர்: 3**

# இனம் மீண்டும் எழுகிறது!

வெங்காலூர்-- 'குணா'

அரசுப் பணித்துறைகளிலும் காவல்துறைகளிலும் அதிகார வகுப்பிடமும் ஊழலும் கையூட்டு வாங்கலும் ஊழல் புரையோடிக் கிடக்கின்றன, இந்த இட ஒதுக்கீட்டு அடிப்படையில் அரசு வேலைகளில் விழுக்காட்டு உரிமை கேட்டுப் பெற்று வருகின்ற தமிழரல்லாச் சாதியினருக்கு வற்றாத அருவி போல் வந்து சேருகின்ற பணப்பெருக்கமும் பொலிவும் அதிகாரமும் அவர்களுக்கு ஒரு திடீர்ப் பணக்காரர் தகுதியைப் பெற்றுத் தந்து விடுகிறது. தமிழரல்லாத தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும்- பிற்பட்ட சாதியினருக்கும் பிறருக்கும் கையூட்டு வழியாக அரசியல் துறையிலும் ஆட்சித் துறையிலும் கிடைத்து வருகின்ற இவை போன்ற மேம்பாடுகள் எல்லாம் தமிழினத்தைக் சேர்ந்த தாழத்தப்பட்ட சாதியினருக்கும் மலை வாழ் மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் கிடைக்க வேண்டிய வாய்ப்புகளையும் கூடப் பெருமளவு பறித்து விடுவதை ஒருபுறம் பார்க்கின்றோம். இவை எல்லாம் தமிழினத்திற்கு ஒட்டு மொத்தத்தில் ஏதமான எதிர் விளைவுகளைத்தாம் ஏற்படுத்தி வருகின்றன. தமிழ்த் தேசிய ஓர்மையுடையவர்கள் இந்த இயற்பாட்டையும் கூர்ந்து நோக்க வேண்டும்,

***பழைய பார்ப்பனியத்தை ஓம்பி வரும் புதிய பார்ப்பனியம்!***

அறுபது எழுபது ஆண்டுகளாக இந்தத் திராவிட இயக்கம் வழக்காடிப் பெற்ற சலுகைகளும் இட ஒதுக்கீடும் பார்ப்பனியத்தை எந்த அளவுக்கு வலுவிழக்கச் செய்துவிட்டன? கூட்டிக் கழித்துப் பார்த்தால் பயன் ஒன்றும் பெரிதாக இல்லை. அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட திராவிட அரசியலின் விளைவாகப் பார்ப்பனியம் இன்று ஆடி அரண்டு தேய்ந்து கட்டெறும்பாகவா போய் விட்டது? இல்லையே! அது பூதமென மற்றொரு மறு பிறப்பு எடுத்துத் திராவிட இயக்கத் தலைமையையல்லவா அரித்துச் செரித்து தன் வயமாக்கிக் கொண்டுள்ளது. தாளிகைத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும்- தொலைக்காட்சி, வானொலி போன்ற தொலைத் தொடர்புத்துறையிலும் பூதம் போல வானோக்கி நிற்கின்ற பார்ப்பனியத்தைத் தானே இன்று நாம் கண்நோகப் பார்க்கிறோம்? இதற்குக் காரணம் என்ன? பழைய பார்ப்பனியத்தை விட மிகவும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் பல்கிப் பெருகி வருவது புதிய பார்ப்பனியந் தான் என்னும் உண்மையைத் திராவிட இயக்கத்திலும் பார்க்க மறுத்து வருகின்றனர்' அதாவது இன்றைய பார்ப்பனியத்துடைய முதன்மைக்கூறாக இருப்பது புதிய பார்ப்பனியமா பழைய பார்ப்பனியமா என்பது தெரியாமல் குருட்டுத்தனமான பார்ப்பனர் எதிர்ப்பை மட்டுமே அவர்கள் கட்டி யழுது வருகின்றனர். புதிய பார்ப்பனியராகி வருகின்ற படித்த பறையரும் பள்ளரும் வன்னியரும் கள்ளரும், நாடாரும் பார்ப்பனரல்லாத பிறரும் பார்ப்பனரைவிட முனைப்பாகப் பார்ப்பனியத்தைப் பேணவும், போலச் செய்யவும் (Imitate) கண்மூடித்தனமாக ஆர்வம் காட்டியும் வருகின்றனர். இதை நாம் அன்றாட நடப்பாகப் பார்க்கவில்லையா? ஆகவே செத்துக் கொண்டிருக்கிற பார்ப்பனியத்திற்குப் புத்துயிரூட்டி வருவது இந்தப் புதிய பார்ப்பனியம்தான் என்னும் வாழ்வியல் உண்மையைத் திராவிட இயக்கத்தவர்கள் ஏறெடுத்தும் பார்க்க மறுத்து வருகின்றனர். இந்த இயற்பாட்டை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளாமைக்குக் காரணம் உண்டு- பார்ப்பனரல்லாதார் நலன்கள் என்ற பெயரில் பயன்பெற்றுத் தங்களுடைய இன நலன்களை நிலைப்படுத்திக் கொண்டுள்ள தமிழரல்லாதோர், நம் தமிழினத்தின் கண்களில் மண்ணைத் தூவி வருகின்றனர். தமிழகத்தில் கொற்றம் புரியப் பார்க்கும் தெலுங்கினர் சூழ்ச்சி தான் இதற்குக் காரணம் என்னும் உண்மை தமிழ்த் தேசிய ஓர்மையாளருக்குப் புலப்பட்டு வருகின்றது. குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தெலுங்கர்களின் நலன்கள் இங்கு அரசை அரட்டியும் மிரட்டியும் கேட்டு வருகின்ற சலுகை இட ஒதுக்கீட்டு அரசியலும் உத்தியும் தமிழகத்தில் எண்ணத்தைத் திசைத் திருப்பித் தமிழினத்தை ஒழிக்கின்ற நோக்கம் கொண்ட ஒரு சூழ்ச்சியே யன்றி வேறில்லை. இன ஓர்மையுள்ள தமிழர்கள் காலம் கடந்த இன்றைய நிலையிலாவது விளங்கிக் கொள்ள வேண்டும். சலுகை-இட ஒதுக்கீடு அரசியல் ஒரு நச்சு வட்டம். ஆயினும் அந்த நச்சு வட்டத்திலிருந்து நம்மால் எளிதில் தப்பித்துக் கொள்ள முடியாது! இதனால் தமிழரில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கும் மலைவாழ் மக்களுக்கும் மட்டுமே சலுகைகளும் இட ஒதுக்கீடும் தரப்பட வேண்டும், தமிழரல்லாதோர்க்கு அது போன்ற சலுகைகளையும், இட ஒதுக்கீட்டையும் தருவதை நிறுத்த வேண்டும். இவ்வாறு நாம் பாடத்தைத் திருத்திப் படிக்க வேண்டும்.

***திராவிட மாயை:***

திராவிடத் தேசிய இனம் என்பதும் ஒரு தேசிய இனம் இல்லை!. ***இந்தி(ய)த் தேசிய இனத்தைப் போன்றே அஃது இல்லாத ஒரு பொய்த் தேசிய இனமாகும்.*** தமிழ்த் தேசிய இனமும்

தெலுங்கு தேசிய இனமும், கன்னடத் தேசிய இனமும், மலையாளத் தேசிய இனமும் துளுதேசிய இனமும் குடகுத் தேசிய இனமும் தென்னிந்தியாவில் இருந்து வந்துள்ள தேசிய இனங்களாகும். அவையன்றித் **திராவிடத் தேசிய இனம் என்னும் ஒரு தேசிய இனம் என்றுமே இருந்ததில்லை.** அப்படி ஒரு தேசிய இனம் இனியும் தோன்றப் போவதில்லை. வரலாற்றில் ஒரு காலத்தில் ஒரு தனித்தேசிய இனமாகவும், தேசமாகவும் இருந்து பின்னர் புறத்தியாரின் படையெடுப்புகளாலோ பண்பாட்டுக் குலைவினாலோ மெல்ல மெல்லச் சிதைந்து மறைந்து போன தேசங்களைப் பார்த்து எங்கெல்சு அவற்றை **வரலாற்றில் இல்லாத தேசங்கள்"** (NON-HISTORIC NATION) என்றழைத்தார். வரலாற்றில் இதுவரை இல்லாமல் புதிதாக தலையெடுக்கத் தொடங்கியுள்ள தேசிய இனங்களையும், தேசங்களையும் கூட அதேபோல் "வரலாற்றில் இல்லாத் தேசங்கள்!' என்று குறிப்பிட்டார். அத்தகைய "வரலாற்றில் இல்லாத தேசங்களும் தேசிய இனங்களும் தங்களைத் தனித்தனித் தேசங்களாகவும் தேசிய இனங்களாகவும் இனி மேல் உருவாக்கிக் கொள்ள முடியாது" என எங்கெல்சு ஒரு தலையாக அடித்துச் சொன்னார். அந்தக் கருத்து இன்று பொய்ப்பட்டு விட்டதென்னவோ . உண்மை. ஆனால் அத்தகைய கருத்துக்கு ஆட்பட்டும் கூட ஒரு தனித் தேசிய இனம் என்னும் தகுதி அந்த இல்லாத திராவிடத் தேசிய இனத்திற்கு இருக்கப்போவதுமில்லை. இந்த நிலையில் அந்தத் திராவிட இனமென்னும் பொய்மானைத் தமிழின ஓர்மையாளர்கள் இனியும் நம்புவது கேட்டிற்கு மேல கேடு பயக்கும்.

**ஆரியக் கொள்கையாலும் இந்துக்கொள்கையாலும் இந்தி(ய)க் கொள்கையாலும் தமிழினத்திற்கு வந்த கேட்டை விட மிகப் பெரிய கேடும் அழிவும் திராவிடக் கொள்கையால்தான் வந்தது என்பதை அரை நூற்றுண்டிற்குமேற்பட்டறிவு நமக்கு உணர்த்துகின்றது.** இன்றைய ஆரியத் திராவிடச் சண்டையோ தெலுங்கர்கள் மூட்டிவிட்ட நிழற்சண்டை. தமிழினத்திற்கு எதிரான ஒரு பொய்க்கொள்கைதான் ஆரியக் கொள்கை என்பதை உடனே புரிந்து கொள்ளலாம். ஆனால் உள்ளிருந்தே, அனைத்தும் கெடுத்த திராவிடமென்னும் பொய் மாந்தனுக்கு நிகரான அழிவைத் தமிழினத்திற்கு ஏற்படுத்திய கொள்கை திராவிடன் என்பதைத் தமிழினத்திற்குப் புரியத் வைப்பது பெரிய பாடாக உள்ளது. இனியும்இதனை உணராமல் இருப்போமாயின் அது பெரிய பேதைமையாகும்.

இந்தக் கண்கூடான உண்மையைச் சொன்னால் திராவிட மூக்காட்டைப் போர்த்தி வருகின்ற தெலுங்கு நலன்கள் நம்மைப் பார்த்துப் "பார்ப்பனியத்தின் எடுபிடிகள்" எனப் பழித்துரைக்கத்தான் செய்வர். தீண்டப்படாதவர்களாகக் காலம் காலமாக ஒடுக்கப்பட்டு வந்த பறையரும் பள்ளரும் தன்மான உணர்வுடன் நாட்டுப்புறங்களில் சம உரிமை . கேட்டெழுந்தபோதெல்லாம் அவர்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கவும், கீழ்வெண்மணி போன்ற உயிர் வேள்விகளை நடத்தவும் செய்பவர்கள் பார்ப்பனரல்லாத அடிமட்டச் சூத்திர சாதியினர் தாமே? இந் நிலையில் தாழத்தப்பட்ட சாதியினரில் ஒரு பகுதியினர் சார்ந்துள்ள அம்பேத்கர் இயக்கத்திற்கும் பிற்படுத்தப்பட்ட சாதியினரைப் பெரும்பாலோராகக் கொண்ட திராவிடர் கழகத்திற்கும் இடையிலான முரண்பாட்டைக் கருதி, அந்த அம்பேத்கர் இயக்கத்தவரைப் பார்த்துப் பார்ப்பனர்களின் அடிவருடிகள் எனப் பழித்துரைப்பது அறிவுக்கும் பொருந்துமோ? அதே போல் நம்மைப் பார்த்து அத் திராவிட அணியிலுள்ள தெலுங்கர்கள் நம்முடைய நெற்றியில் ஒரு முத்திரை குத்தி நம்மிடம் பகைமையைக் காட்டுவது தங்களின் இன நலன்களைக் காக்க அவர்கள் செய்கினற திசை திருப்பலாகத்தானே இருக்க முடியும்?

ஏறக்குறைய அரை நூற்றுண்டுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட தனித்தமிழ் இயக்கமோ, அந்தத் திராவிடச் கொள்கைக்கான நல்ல மாற்றுக் கொள்கையாக ஆக்கமும் ஊக்கமும் பெற்று. ஆல்போல் உள்ளபடியே வளர்ந்திருக்க வேண்டும். தமிழகத்திற்குள் நடமாட வந்த திராவிடக் கொள்கை என்பது தமிழின நலன்களுக்கு எதிரான ஓர் ஏமாற்றுக் கொள்கை என்பதை அந்தத் தனித்தமிழ் இயக்கத்தினரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. சிவனிய (சைவ) வேளாளரின் கொள்கையோ என எண்ணி மயங்கும் அளவுக்கு மரக்கரித்தனம் மிகுந்து போர்க்குணம் அற்றதாக அந்தத் தனித்தமிழ்க் கொள்கை தொடக்கத்தில் இருந்தது. பின்னர் தேவ தேயப் பாவாணர் தலைமையில் அத் தனித் தமிழ் இயக்கம் அடிநிலை அறிவர் வரை கீழிறங்கி ஆழமான சில மொழி அறிவியல் அளவீடுகளைக் கண்டது. அதன் பின்னரும் கூட அத்தனித்தமிழ் இயக்கத்தால் ஒரு மாற்று அரசியல் கொள்கையாக வேரூன்ற முடியவில்லை. வெறும் மொழித் தூய்மை இயக்கமாகவே குன்றி நின்றது! தமிழரல்லாதாரின் திராவிடக் கொள்கையை எதிர்த்து விட்டுக் கொடுக்காமல் போரிட இயலாமல், அத்திராவிட அரசியலின் முன்னால் அத்தனித்தமிழ்க் கொள்கை அடங்கி ஒடுங்கிப் போனது. (தொடரும்)

---

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவல் கண்காணிப்புகளுக்கும் இடையில் நிறைந்திருப்பது மிகவும் வியப்புதான். மாய்மாய் மறைந்த ஊர்தியைத் தீரம் மிக்க தமிழகக் காவல் படை இன்னும் தேடிக்கொண்டுள்ளது.

—நன்றி 'தளபதி' 11-13, 3-6-92 O

# தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் தமிழ்த்திரு பிரபாகரனும்!

—தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

இரண்டாம் உலகப் போரின்போது செர்மனி நாட்டை ஆண்ட கொடுங்கோலன் இட்லருக்கு (Hitler) கோயபல்சு (Goebbels) என்ற கொள்கை பரப்பு அமைச்சன் (Propaganda minister) இருந்தான். அவன் "ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் பெரும்பாலான மக்கள் அப் பொய்யை உண்மையென நம்பி விடுவார்கள்" என்று சொன்னான். இப்போது தமிழகத்திலே நடக்கும் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அந்தக் கூற்றுதான் என் ஞாபகத்துக்கு வருகிறது.

தமிழ்ப் பகைவர்கள் நம் பெருமதிப்புக்கும்-பேரன்புக்குமுரிய தமிழ் ஈழ விடுதலைப்புலிகளைப் பற்றியும், அதன் தலைவர் தமிழத்திரு பிரபாகரனைப் பற்றியும் பலவாறான பொய்க் கருத்துகளைத் தமிழகமெங்கும் பரப்பி வருகிறார்கள். எப்படியாவது தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தே விடுதலைப்புலிகளைப் பற்றியும் பிரபாகரனைப் பற்றியும் ஒரு வெறுப்பு-உணர்வை வளர்த்து விட வேண்டும் எனத் தமிழ்ப் பகைவர்கள் முயற்சி செய்கிறார்கள். பிரபாகரனும்-விடுதலைப்புலிகளும் தந்நலக்காரர்கள் என்றும்-விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழ் ஈழ மக்களின் நலன் கருதிய ஒரு விடுதலைப் படையன்று, அது தன்னலம் கருதிய தன்னலர்களின் இயக்கம் என்றும் தவறான, பொய்யான கருத்தைத் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்? இவ்வாறு, கொடுங்கோலன் இட்லரின் கொள்கை பரப்பு அமைச்சன் அன்று செய்ததையே தமிழ்ப் பகைவர்கள் இன்று செய்கிறார்கள்.

தொடக்கக் காலத்திலிருந்து இந்நாள் வரையிலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் செய்கைகளை ஆய்ந்து பார்ப்போர், விடுதலைப்புலிகள் தந்நலமற்ற, தன் இன நலமே கருதுகின்ற விடுதலைப் படையே என்பதை உணர்வர். இது தமிழ்ப்பகைவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் தங்கள் அரசியல் நலன்களைக் கருதியே தமிழ்ப்பகைவர்கள் விடுதலைப்புலிகளைப் பற்றிய பொய்க் கருத்துகளைப் பரப்பி வருகிறார்கள்.

விடுதலைப்புலிகளும், பிரபாகரனும் தந்நலமற்றவர்கள், ஈழ மக்களின் நலனையே கருதியவர்கள் என்பதைக் கீழ்க்காணும் ஒரு நிகழ்ச்சியே தெள்ளென விளக்கும். 1987 இல இராசீவ்காந்தி 'விடுதலைப் புலிகள் தங்கள் படைக் கருவிகளனைத்தையும் இந்தியப் படையிடம் கொடுத்துவிட்டு, ஈழ விடுதலைக்கான போரை நிறுத்துவார்களேயானால், ஒவ்வொரு விடுதலைப்புலிக்கும் (அதன் படைத்தலைவர்கள் உட்பட) இலவசமான படிப்போ அல்லது இலங்கையின் காவல் துறையில் (Police) வேலையோ கொடுப்போம்" என்று சொன்னார். விடுதலைப்புலிகள் தந்நல உணர்வுடையவர்களானால் இதனை உடனடியாக ஏற்றுக் கொண்டிருப்பார்கள்! "ஈழத்துப் பொது மக்கள் சிங்களவருக்கு அடிமைப் பட்டுக் கிடக்கட்டும். நமக்கு இலவசப் படிப்பு கிடைக்கிறது. அல்லது நல்ல வேலை கிடைக்கிறது. நாம் நன்றாக வாழலாம்" என்று நினைத்து, இலவசப் படிப்பையும், வேலைகளையும் உடனடியாக ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் ஒரு விடுதலைப்புலி கூட இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தகைய ஈகப் பெருமக்களை தந்நலமிக்கோர் என்று கூறுவது எவ்வளவு தவறு!

1987-இல் இராசீவ் காந்தியும் இலங்கைக் குடியரசுத் தலைவர் செயவர்த்தனவும் கூடிச் சேர்ந்து ஈழத் தமிழர் மேல் திணிக்க முயன்ற இந்திய-இலங்கை அமைதி உடன்படிக்கையைப் பிரபாகரன ஏற்றுக் கொள்வாரேயானால் இலங்கை யரசுக்கு உட்பட்ட (அதாவது சிங்களவருக்கு அடங்கிய—சிங்களவருக்கு அடிமைப்பட்ட) மாநில முதலமைச்சர் பதவியைப் பிரபாகரனுக்குக் கொடுப்பதாக இராசீவ் காந்தி சொன்னார். ஆனால் தந்நலமற்ற தமிழ்மகன் பிரபாகரனே அத்தகைய முதலமைச்சர் பதவி வேண்டாமென்று மறுத்து விட்டார்.

முதலமைச்சர் பதவி வேண்டாமென்றால் பிரபாகரனுக்குத் தனிப்பட்ட முறையில் கோடி உருபாக்களும்- அவர் இந்தியாவில் வாழ விரும்பினால் அந்த கோடிக் உருபாக்களோடு தமிழ்நாட்டில் ஒரு பெரிய வீடும், அவர் வாழ்நாள் முழுவதும் அவருக்குப் பாதுகாப்பும் (தில்லி அமைச்சர்கள் சிலருக்கு அரசு கொடுக்கும் சிறப்புப் பாதுகாப்பைப் போல) கொடுப்பதாகச் சொன்னது இந்திய அரசு. அதையும் மறுத்து விட்டார் நமது பிரபாகரன். (இதையெல்லாம் நானாகச் சொல்லவில்லை. ஆங்கிலத் தாளிகைகளில் நான் படித்த செய்திகள் இவை. பிரபாகரன் அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர் பெருஞ் செல்வராய் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அதே வேளையில் தமிழ் ஈழப் பொது மககளோ சிங்களவருக்கு அடிமைப்பட்டு ஏழ்மையிலும், தாழ்மையிலும் வாடி வதங்குவர். 'தமது சொந்த வாழ்க்கை பெரிதன்று; தமது சொந்த நலன் பெரிதன்று தமிழ் ஈழமக்களின் நலனே பெரிது; தமிழ் ஈழ மக்களின் நலனைக் காப்பதே

தம் கடன், தமிழ் ஈழ மக்களைப் பாதுகாக்கும் தமிழ் ஈழ விடுதலை பெறுவதே தம் கடன்.'' எனக் கருதி நமது பிரபாகரன், இராசீவ் காந்தி அவருக்குத் தனிப்பட்ட முறையில் கையூட்டாகக் (இலஞ்சமாக) கொடுக்க வந்த கோடி உருபாக்களையும், வீட்டையும், பாதுகாப்பையும் தூசென மறுத்துத் தள்ளி விட்டார். ஏனென்றால் **கள்ளமில்லையே அந்த வெள்ளையுள்ளத்தே, தந்நலமில்லையே அந்தத் தமிழன் நெஞ்சத்தே!**

இரண்டரையாண்டுகளாக இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த போருக்குப் பின் இந்தியப் படை ஈழத்தை விட்டு வெளியேறியது. 1990-இல் இந்தியப் படை ஈழத்தை விட்டு வெளியேறிய பின் சிங்கள அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த ஒப்புரவுப் பேச்சின் போது சிங்கள அரசு விடுதலைப் புலிகள் ஈழ விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டுச் சிங்கள அரசுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்களேயானால்-விடுதலைப்புலிகள் ஒவ்வொருவருக்கும் (விடுதலைப் புலிகளின் படைத் தலைவர்கள் உட்பட) மாநில அரசில் வேலை கொடுப்பதாகவும், பிரபாகரனுக்கு மாநில முதலமைச்சர் பதவியைக் கொடுப்பதாகவும் கூறியது. இதனை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டிருந்தால் அவர்களுக்கு வேலைகளும், நல்ல சம்பளங்களும் கிடைத்திருக்கும். அவர்கள் நன்றாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஈழப் பொதுமக்களின் நிலை என்ன? "பழைய குருடி கதவைத் திறடி!' என்ற நிலைதான், ஈழத்தின் வளமாக மாவேலி அணைத்திட்டப் பகுதிகளில் சிங்களவர் குடியேற்றம் தொடரும் (தமிழர்கள் முன்னைப் போலவே புறக்கணிக்கப்பட்டு வரண்ட நிலங்களில் பயிரிட்டு, வறுமை நிலையிலேயே வாழுவர்) முன்னைப் போலவே, நல்ல ஊதியமுள்ள வேலைகள் சிங்களவருக்கே கொடுக்கப்படும்; கல்லூரிப் படிப்புகளில் ஈழத்தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப் படுவர்; முன்னைப் போலவே பெரிய தொழிற்சாலைகளெல்லாம் சிங்களவப் பகுதிகளிலே கட்டப்பட்டுச் சிங்களவருக்கு வேலை கிடைக்கும். ஈழத் தமிழருக்கோ வேலையில்லாத் திண்டாட்டம்தான். விடுதலைப் புலிகள் தந்நலமுடையோராயிருந்திருந்தால், சிங்கள அரசு அவர்களுக்குக் கொடுக்க வந்த வேலைகளை ஏற்றுக் கொண்டு. ஈழத் தமிழ்ப் பொது மக்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்றிருந்திருப்பர். ஆனால் விடுதலைப் புலிகள் ஒவ்வொருவரும் **தந்நலமற்ற தங்கங்கள்; பொதுநலம் பேணும் பெருந்தகையாளர்கள்.** அதனால்தான் அவ்வேலைகளை ஏற்க மறுத்துத் தமிழ் ஈழமக்களின் நலங்காக்கத் தொடர்ந்து போரிடுகிறார்கள். இவர்களைப் போய் தந்நலர்கள் என்று சொல்கிறார்களே தமிழ்ப் பகைவர்கள்! இவர்கள் தந்நலர்கள் அல்லர். தம் இன நலம் பேணும் தன்மான வீரர்கள்; தலையான பொது நலத் தொண்டர்கள்.

1990-இல் சிங்கள அரசு பிரபாகரனுக்குக் கொடுப்பதாகச் சொன்ன மாநில முதலமைச்சர் பதவியைப் பிரபாகரன் வேண்டாமெனத் தள்ளி விட்டார். ஈழத் தமிழ்ப் பொது மக்களின் நலனைக் கைவிட்டு விட்டுத் தாம் மட்டும் நலன் துய்ப்பதை அந்தத் தூய தொண்டுள்ளம் ஏற்றுக் கொள்ள வில்லை. பிரபாகரன் விரும்பியிருந்தால், சிங்கள அரசுக்குக் கட்டுப்பட்டு முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டு நலவாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனால் ஈழப் பொதுமக்களின் துயர் நீடித்து நிலைத்திருக்கும். பிரபாகரன் முதலமைச்சரின் மாட மாளிகையிலே செல்வராய் வாழ்வு நடத்தும் போது, ஈழத்தமிழ்ப் பொதுமக்களோ வேலை-வாய்ப்புகளிலும், கல்லூரிப் படிப்பிலும் சிங்கள அரசால் புறக்கணிக்கப்பட்டு முன்னைப் போலவே நைந்த நசுக்கப்பட்ட நிலையில் வாழுவர். அதனால் தான் தந்நலமற்ற பிரபாகரன் சிங்கள அரசோடு அந்த உடன்பாடு செய்ய மறுத்து, ஈழவிடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். இத்தகைய தந்நலமற்ற தலைவனைப் போய் தந்நலக்காரர் என்று சொல்கிறார்களே தமிழ்ப் பகைவர்கள்!

பிரபாகரன் விரும்பியிருந்தால் இன்று முதலமைச்சர் மாளிகையிலே- பதனக்காற்று (air-conditionedair) மேனியைத் தழுவ, பட்டாடையுடுத்துப் பல்சுவை உண்டிகளும் அருந்தி நலவாழ்வு நடத்தியிருக்கலாம். மாறாக, மரமும், கொடியும், புல்லும், பூண்டும் படர்ந்த ஈழத்துக் காட்டுக்குள்ளேயிருந்து சிங்களப் படையை யெதிர்த்துப் போர் நடத்துகிறார். ஏனெனில், **தன்னலம் கருதாது தமிழ் ஈழ மக்களின் நலனையே கருதும் தலைவர் இவர்.** இத்தகைய தலைமகனைத் தந்நலக்காரர் என்று சொல்லும் தமிழ்ப் பகைவரின் நாவழுகாதோ?

நாம் மேற்கூறிய நிகழ்ச்சிகளையெல்லாம் பார்க்கும்போது தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ஒரு தந்நலமற்ற விடுதலைப்படை என்பதும், அதன் தலைவர் பிரபாகரன் ஒரு தந்நலமற்ற விடுதலை வீரர், விடுதலைப்படையின் தலைவர் என்பதும் தெளிவு''. O

---

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி;

ஏற்படும் சிலருக்கு. நடைமுறையில் கொள்கையை 'உரசி'ப் பார்க்கலாம்! அப்போது, கொள்கை மக்கள் நாயக வழியில் உருவாக்கப்பட்டிருப்பது தெரியும்.

ஏனெனில் இன்றுள்ள 'ஊழல்' 'கொடுமை', 'வன்முறை' 'சாவு' எல்லாம், மக்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைகள் அல்ல. அவர்கள் தூய, அமைதியான, அறநெறியை விரும்புகிறார்கள்—அவற்றை நிறைவேற்ற அமைப்பின்றி அல்லாடுகிறார்கள்—நாம் அத்தகைய பாதையில் செல்லத் துணிந்தோம்—இத்துணிவே, தகுதியைப் பெற்றளிக்கும்—நம்புவோம்! (தொடரும்)

# அன்றைய கதைகளும் இன்றைய அரசியலும்!

செ. நல்லசாமி - அறி.இ., க.மு., க.மு.,ச.இ.
வழக்கறிஞர், அரச்சலூர்.

## 1. ஏழையை வேலை தேடி வந்தது!

ஒரு நகரில் ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை வருமானம் இல்லாததால் அவனையும் அவன் மனைவி மக்களை-யும் வறுமை வாட்டியது.

இந்தச் சூழ்நிலையில் ஓர் அரசு அதிகாரி ஒருவ னிடம் வேலை கேட்டுச் சென்றான். அரசு அதிகாரி அவனுக்கு உடனடியாக வேலை கொடுக்காமலோ, அல்லது இல்லை என்று சொல்லாமலோ, இன்று வா' 'நாளை வா' என்று அவனை இழுத்தடித்துக் கொண்டு வந்தான். அவ்வேழையும் அவன் வேலை கொடுப்பான் என்ற நம்பிக்கையில அவன் சொன்ன நாள்களில் எல்லாம் அவனிடம் போய் வந்து கொண்டிருந்தான்.

அந்த ஏழை அடிக்கடி குறிப்பிட்ட அந்த அரசு அதிகாரி வீட்டிற்குச் செல்வதையும், பின்னர் திரும்பி வருவதையும், அவனுக்குத் தெரிந்த ஒருவர் அடிக்கடி பார்த்து வந்தார். அவர் ஒரு நாள் அந்த ஏழையைக் கூப்பிட்டு, அவர் அந்த அரசு அதிகாரி வீட்டிற்கு அடிக்கடி சென்று வரும் காரணத்தைக் கேட்டார்.

அதற்கு அந்த ஏழை தான் வேலை இல்லாது இருப்பதையும், குடும்பத்தின் சூழ்நிலையையும், அதிகாரி இது தொடர்பாகக் கூறி வருவதையும் அழாத குறையாக அவரிடம் கூறினார்.

அதற்கு அவர் அவனிடம், "நீ அரசு அதி-காரி வீட்டிற்குச் செருப்புகள் தேய தொடர்ந்து நடப்பதாலோ முறையிடுவதாலோ, உனக்கு வேலை கிடைக்கப் போவதில்லை. பக்கத்துத் தெருவில் 'ரோசா மணி' என்ற பெண்மணி இருக்கிறாள். அவளிடம் சென்று உன்னுடைய இரக்கத்திற்-குரிய நிலைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி அழு-தால் உனக்கு உறுதியாக வேலை கிடைக்கும்." என்று கருத்துக் கூறினார்.

அந்த ஏழை அதைக் கேட்டு ஒருவாறு நம்-பிக்கை கொண்டவனாய் அடுத்த தெருவிற்குச் சென்றான். அங்கு ரோசாமணியிடம் தன்னை அறி-முகப்படுத்திக் கொண்டு, மிகவும் அடக்கவொடுக்க மாகத் தனது வறுமை நிலையையெல்லாம் எடுத்துச் சொல்லித் தனக்கு எப்படியாகிலும் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து தரச்சொல்லி அழுதான்.

அவன் மீது ரோசாமணிக்கு இரக்கம் ஏற்-பட்டது. அவள், 'நீ இனிமேல் அந்த அரசு அதி-காரியைப் போய்ப் பார்க்க வேண்டிய தேவை இல்லை'' எனவும், "வேலை உனது வீடு தேடி வரும்'' என்றும் அவனுக்கு ஆறுதல் கூறித் தேற்றி அனுப்பினாள்.

அடுத்த நாள் அரசு ஊழியன் ஒருவன் அந்த ஏழை வீட்டைத் தேடி வந்தான். அவனுக்கு வேலை போட்டுக் கொடுத்திருப்பதாகவும், உடனடியாகக் கையோடு அரசு அதிகாரி அவனை அழைத்து வரச் சொன்னதாகவும் கூறி, அவனை அவ்வூழியன் அழைத்துச் சென்றான்.

அரசு அதிகாரிக்கும் ரோசாமணிக்கும் இருந்த தொடர்பு அந்த ஏழைக்கு வேலை வாய்ப்பைத் தந்தது.

இந்தக் கதை இராமகிருட்டிண பரம அம்சர் கூறியது.

உரிமை பெற்ற இந்தியாவில் இன்று இந்தக் கதையின நடைமுறையே அரசியலாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எந்த வழி அந்த ஏழைக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததோ, அதே வழிதான் இன்று அரசியல்காரர்களுக்குப் பதவியைப் பெற்றுத் தரு-கின்றது.

தேர்தலில் நின்று மக்களுக்குழைக்கின்ற சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு மக்களை நாட வேண்டியதும் இல்லை. சாய்கால் (செல்வாக்கு) தேட வேண்டியதும் இல்லை. மக்களை அணுகி அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தீர்க்க வேண்டிய தேவையும் இல்லை. இன்றைய நிலையில் அரசியல் வாழ்வில் அல்லது பொதுவாழ்வில் ஈடு படுவோர் நல்லவராக, வல்லவராக, ஒழுக்கம் உள்ளவராக, ஆன்றோராக, சான்றோராக இருக்க வேண்டியதும் இல்லை. அத்துடன் இப்படிப்பட்ட சிறப்புக் குணங்கள் உள்ளவரை ஏற்றுக்கொள்ள எந்த அரசியல் கட்சித் தலைமையும் அணியமாகவும் இல்லை.

அரசியல் கட்சியினுடைய தலைமையைத் தனக்குச் சார்பாக, ஆதரவாக ஆக்கிக் கொள்வதே இன்றைய நடைமுறை அரசியல். தலைமையில் இருப்பவருடைய தொடர்புகளைக் கண்டுபிடித்து, தொடர்புடையவர்களைத் தன்வயப்படுத்தித் தனக்கு வேண்டிய பதவிகளைப் பெற்றுக் கொள்வதே இன்றைய நடைமுறை அரசியல் தந்திரம்.

தேர்தலில் நானூறு ஒப்போலைகள் (வாக்கு கள்) வாங்க இயலாதவர்கள் தலைமையின் அரு ளால் நாற்பதாயிரம் ஒப்போலைகள் மிகுதி வாங்கி வெற்றி பெறுகின்றனர்; வேண்டிய பதவியும் பெறுகின்றனர்.

Scanned with CamScanner

தலைமைக்கு அடிபணிந்து, தலைமையைத் தனக்குச் சார்பாக—ஆதரவாகச் செய்து கொள்வதே நிலையான பதவியை அளிக்கிறது.

மக்களாட்சியில் ஒப்போலை (வாக்குகள்) அளித்த மக்களின் நலன்களை மக்களின் படிநிகராளிகள் மறந்து விடுகின்றனர்.

தனக்கு அரசியல் வாழ்வு அளித்த தலைமை மற்றும் தலைமைக்கு வேண்டியவர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும், நம்பிக்கைக்கு உரியவராக நடந்து கொள்வதிலும், புகழ்வதிலும்-பொற்பாதங்களில் விழுவதிலும் போட்டி போடுகின்றனர்.

*'நாட்டுரிமையின் (சுதந்திரத்தின்) விலை மக்களுடைய விழிப்புணர்வு'*

— நமது விழிப்புணர்வு வீழ்ந்து விட்டதையும், பொறுப்புணர்வு போய் விட்டதையும் இச் செயல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆகவேதான் மக்களை மறந்த மக்களாட்சி இம்மண்ணில் மலர்ந்துள்ளது.

### 2. பழத்தை விநாயகர் பெற்ற கதை!

பரமசிவன், பார்வதி ஆகியோரிடமிருந்து ஒரு பழத்தைப் பெறுவதற்காக அவர்களுடைய இரு பிள்ளைகளும் போட்டியிடுகின்றனர். இருப்பதோ ஒரு பழம். அதை இருவருக்கும் கொடுக்க இயலாது. இருவரில் ஒருவருக்கு மட்டுமே கொடுக்க இயலும். இதற்காக ஒரு போட்டியைப் பிள்ளைகளுக்குப் பெற்றவர்கள் வைத்தனர்.

யார் இந்த உலகத்தை முதலில் சுற்றி வருகின்றார்களோ அவர்களுக்கே இந்தப் பழம் சொந்தம் எனச் சொல்லப்பட்டது.

இளையவனான முருகன் தன் மயில் ஊர்தியில் ஏறி உலகைச் சுற்றிவரப் புறப்பட்டான்.

மூத்த பிள்ளையான விநாயகன் தன் எலி ஊர்தியில் ஏற முற்படவில்லை. காரணம் சொல்ல முடியாதது என்பது விநாயகனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

கனியை எளிதாகப் பெறும் வழியை விநாயகன் கண்டறிந்து, தன் தாய் தந்தையரை எளிதாகச் சுற்றி வந்து, 'தாய் தந்தையர்தாம் எனது உலகம்' என விளக்கம் சொல்லிப் பெற்றோரின் கால்களிலே விழுந்து எளிதாகக் கனியைக் கைப்பற்றினார்.

மயில் மேல் ஏறி உலகை வலம் வந்த முருகன் ஏமாற்றப்பட்டான். இதனால் தாய் தந்தையரிடம் சினந்து கொண்டு, பழநி மலையின் உச்சிக்கே சென்று விட்டான்.

அன்று விநாயகன் மேற்கொண்ட தந்திரமே இன்றைய அரசியலில் அடிப்படை சிந்தனையாக உள்ளது. அன்று அவன் பழம் பெற்ற வழியே இன்றைய அரசியலில் பதவி பெறும் வழியாக உள்ளது.

மயிலேறி உலகை வலம் வந்த முருகனுக்கு அன்று பழம் கிடைக்கவில்லை. இன்று மக்கள் நலனில் நல்ல அக்கறை கொண்டு, மக்களுக்குத் தொண்டாற்றும் நல்லவருக்கு, வல்லவருக்கு ஒழுக்கம் உள்ளவருக்கு இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்களுக்குத் தொண்டாற்ற வாய்ப்புக் கிடைப்பதில்லை.

பெற்றோரை எளிதாகச் சுற்றி வலம் வந்து அன்று பழத்தை எளிதாகப் பறித்துக் கொண்டான் விநாயகன். இன்றும், அரசியல் தலைமைக்கு என்றும் தலையாட்டி மனச்சான்றை அடகு வைத்து ஆண்டவனுக்கு மேலாக அரசியல் தலைமையைப் புகழ்ந்து, இடுப்பிலே துண்டைக் கட்டி, எண் சாண் உடம்பையும் இரு சாணுக்கிக் கை கட்டிக் கூனிக் குறுகிக் கால்களில் விழுந்து எளிதாகப் பதவி பெறும் நச்சு நடைமுறை வழக்கத்துக்கு வந்து விட்டது.

இந்த நச்சு நடைமுறை நமது அரசியலில் உள்ளவரை நாட்டின் முன்னேற்றப் பாதை மூடியே கிடக்கும்.

வீழ்ந்து விட்ட விழிப்புணர்வையும், போய் விட்ட பொறுப்புணர்வையும் மீண்டும் மீட்பதன் மூலம் மட்டுமே இந்த நச்சு நடைமுறையை நசுக்க முடியும். O

TN/MS(C) 657

நூல்-அஞ்சல்

பெறுநர்

**சிந்தனைக்கு 72**

ஒரு கொள்கை மிகவும் உண்மையாகவும், மக்களுக்கு நலம் பயப்பதில் உறுதியாகவும் இருந்து, அது தோல்வியுறுமானால், அதை எதிர்ப்பவர்கள் வலிவாக இருக்கிறார்கள் என்று பொருளில்லை; அதை எடுத்துச் செல்பவர்கள் மெலிவாக இருக்கிறார்கள் என்பதே பொருள்.

**தமிழ்நிலம்**

ஆசிரியரும், வெளியிடுபவரும்.
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம்.
5, அருணாசலத் தெரு, சென்னை-5.
தொலைபேசி எண் : 847829.

Scanned with CamScanner